விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 62 கார்த்திகை 27 ஜ. அவ்வல் பிறை 25 இதழ் 232

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-12-1990

கடல்பிராந்திய அச்சுறுத்தலை தடுக்க ஸ்ரீலங்கா சீனா உடன்பாடு?

(கொழும்பு)

இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து கடற்பிராந்தியத்தினூடாகவரும் அச்சுறுத்தலை தவிர்க்கும் பொருட்டு சீனவுடன் இலங்கை 'கடற்பாதுகாப்பு திட்ட'மொன்றை ஏற்படுத்தும் சாத்தியமிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களிலி

(4-ம் பக்கம் பார்க்க)

சிறையிலிருந்து தோழர்களை மீட்க ஜே. வி. பி.யினர் முயற்சி

(கொழும்பு)

தென்பகுதி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜே. வி. பி. தீவிரவாதிகளை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கிடைத்த செய்திகளையடுத்து பாது

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசின் கூற்றில் உண்மையில்லை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக இலங்கை அரசு கூறிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பாகவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசு சம்மதம்

ஹமில்டன் நாடு திரும்பினார்

(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ந்தும் இராணுவ உதவிகள் வழங்க பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்துள்ளது. இது குறித்து பாகிஸ்தான் இராணுவத் தளபதிகளுடன் சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

கடந்தமாதம் 21-ம் திகதி பாகிஸ்தானுக்கு இரகசிய பயணமொன்றை மேற்கொண்ட இராணுவ தளபதி அங்கு இரு வாரங்கள் தங்கியிருந்து இராணுவதளபதிகளையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்தார்.

இதையடுத்து நேற்றுமுன் தினம் நாடு திரும்பிய ஜெனரல் ஹமில்டன் தமது பயணம் இலங்கைக்குப் பெரும் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (சி)

காரைநகரில் 'ஹெலி' தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நேற்றுக்காலை ஹெலியிலிருந்து சில நிமிடங்கள் ஷெலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படை முகாமை அண்டிய பகுதியில் சுமார் 40 நிமிடங்கள் சுற்றிய ஹெலி, வலந்தலைப் பகுதியில் 5 நிமிடங்கள் கலிபர் தாக்குதலை நடத்தியது. எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (சி)

இந்திய இராணுவம் இலங்கைக்கு செல்லாது

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை இந்தியா ஆதரிக்கவில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்லா தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலை குறித்து நேற்று முன்தினம் வெளியுறவு அதிகாரிகளை சந்தித்த பின் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இராணுவம் வளைகுடாவுக்கோ, இலங்கைக்கோ இனி ஒருபோதும் அனுப்பப்பட மாட்டாது. பிரச்சனையைச் சமாதான முறையில் தீர்க்கவே இந்தியாவும் விரும்புகிறது என்றார். (சி)

இராணுவ தளபதிகள் கொழும்பில் ஆலோசனை

(கொழும்பு)

வடபகுதி நிலைமை குறித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடன் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ நேற்று முன் தினம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

வடபகுதியில் புதிய இராணுவ நடவடிக்கைமேற்கொள்வது குறித்தே இந்த ஆலோசனை நடைபெற்றதாக ஜெனரல் ஹமில்டன் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பை அடுத்து ஜெனரல் கொப்பேகடுவ வடபகுதிக்குத் திரும்பியுள்ளதாகவும் நேற்று மாலை கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (சி)

வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

எதிர்பாராத வெடிவிபத்தொன்றில் நேற்று முன்தினம் லெப்ரினன் ஹிரிஹரன் (கார்த்திகேசு புலேந்திரன், சாவகச்சேரி) வீரமரணமடைந்தார். (வி)

காவலூரில் மோதல்: 2 இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்ற கடும் மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை ஊர்காவற்றுறை முகாமிலிருந்து குடியிருப்பு பகுதிகளை நோக்கி முன்னேற முயன்றபோது கடும்மோதல் ஏற்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

இராணுவத்திற்குபின்னடைவு அதிகாரிகள் பெரும் கவலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த 48 மணி நேரத்தில் இடம்பெற்ற புலிகளின் கடும் தாக்குதலினால் இராணுவத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக கொழும்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

திருமலை, மட்டக்களப்பில் கடந்த 48 மணி நேரத்தில் இரு அதிகாரிகள் உட்பட 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 7 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

600 மீற்றருக்கு ஒரு முகாம் இருக்கும் திருமலையில் புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்தி இராணுவத்தைக் கொன்று ஆயுதம் கைப்பற்றியது பாதுகாப்பு வட்டாரத்தில் கலக்கத்தைஏற்படுத்தியுள்ளது. (சி)

மன்னார் கடலில் 6 மீனவர் கைது

(மன்னார்)

மன்னார் கடலில் வைத்து நேற்று ஆறு கடற்றொழிலாளர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஆறு பேரையும் கடற்படையினர் விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகத்

(4-ம் பக்கம் பார்க்க)

உவர்மலை கடலில் 20 தமிழர் சுட்டுக் கொலை!

(திருமலை)

திருமலையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 24 தமிழர்களில் 20 பேர் சுட்டுக்கொல்லப்பட்டு சடலங்கள் கடலில் வீசப்பட்டுள்ளதாக தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், திருமலை மாவட்டத்தில் கைது செய்யப்படும் தமிழர்கள் அனைவரும் உவர்மலைப்பகுதியிலுள்ள பிளன்ரன் பொயின்ற் இராணுவ பயிற்சி முகாமுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கு பலசித்திரவதைக்

(4-ம் பக்கம் பார்க்க)

சிறிய 'வஸ்து' வெடித்து மண்டைதீவில் இருவர் பலி

(நல்லூர்)

மண்டைதீவில் நேற்று இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் சிறுவன் உட்பட இருவர் பலியானார்கள். ஒருவர் படுகாயமடைந்தார்.

இறந்த சிறுவன் எங்கிருந்தோ ஒரு சிறிய பொருளை எடுத்து வந்து வீட்டிலிருந்த

(4-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-4158)

நுரைவளம் மிக்க மில்க்வைற் சலவைப் பவுடர் துணியில் நூலிழைகளினூடே செறிந்து துரிதமாக அழுக்கை முற்றாக அகற்றிப் பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது. 100 சிறிய அளவு பைக்கற் தரும் அன்பளிப்பு ஒரு லேஞ்சி; மில்க்வைற், யாழ்ப்பாணம்; (சி-929)

தவறிவிட்டது

685040212V இலக்கமுடைய அடையாள அட்டையும், கைப்பையும் 10-12-90 அன்று கல்விலங்காடு சந்தையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையை T. சாமுவேல், அச்செழு வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டிக் கொள்கின்றேன். (சி-4179)

தொடர்ந்து பதற்றநிலை

(ஹைதராபாத்)

ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத் நகரிலும், கான்பூர் நகரிலும் தொடர்ந்து பதற்றநிலை இருந்துவருவதாக இராணுவம் அறிவித்துள்ளது. இந்நகரங்களில் நேற்று மூன்றாவது நாளாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைதியை மீண்டும் நிலைநாட்ட இராணுவம் கொடி அணிவகுப்பு நிகழ்ச்சியை நடாத்திவருகின்றது. (எஸ்)

இராசி மலர்

13-12-1990
வியாழக்கிழமை

துவாதசி பி. இ. 4-18 வரை. சுவாதி பி. இ. 12-45 வரை அமிர்தசித்தம். இராகுகாலம் பகல் 1-00 மணி முதல் 3-20 வரை. நல்லநேரம் காலை 7-50 முதல் 9-20 வரை.

மேடம்: காரிய வெற்றி, சாதனை செய்தல். தொழில் முன்னேற்றம், வாழ்க்கை வசதி.

இடபம்: அன்னையின்பாசம், ஆலயதரிசனம், தொழில் வளர்ச்சி, ஞானிகள்சந்திப்பு, விருந்துபசாரம்.

மிதுனம்: குடும்பக் கவலை, மனைவியால்துன்பம், தொழில் பாதிப்பு, காரியத்தடை, மனக்குறை

கடகம்: அயலவர்தொல்லை, மனைச்சிக்கல், குடும்பக்கௌரவம், தொழில் நஷ்டம், அலைச்சல்.

சிங்கம்: ஏகாந்த உறவு, பயணங்களால் நன்மை, வேண்டியவைகிட்டல், பொதுசனத் தொடர்பு.

கன்னி: குறை கேட்டல், தாய்வழி நினைவு, தொழில் கஷ்டம், குடும்பத்தில்செலவு

துலாம்: புதிய ஸ்தானம், கௌரவம், அதிகாரிகள் பாராட்டு, தியாக சிந்தை.

விருச்சிகம்: அந்நிய வாசம், மனக்கவலை, தொழில் பிணக்கு, கருத்துமுரண்பாடு, செலவு.

தனுசு: அறிபநேசம், கடன்வரவு, குடும்பத்தில் குதூகலம், அறிஞர் சந்திப்பு;

மகரம்: தொழில் வாய்ப்பு, அந்நியர்சகாயம், புதியஉறவு, வைத்தியச் செலவு.

கும்பம்; கடுமையான போக்கு தொழில் பிணக்கு, குடும்பத்தில் முரண்பாடு, புத்திரர் கவலை.

மீனம்: தப்பபிப்பிராயம், கடன்படல், நண்பர்கள் தொல்லை, அனுவசியத் தலையீடு.

ஜோஸ்யர்.

நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் க. கைலாசபதியின் 8-வது நினைவஞ்சலிக் கூட்டம் வரும் 16-ம் திகதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கவிஞர் இ. முருகையன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(153)

வைத்தியசாலை இடமாற்றம்

கடந்த 300 ஆண்டுகளுக்கு மேல் முறிவு நெரிவு வைத்தியத்திலும் ஏனைய சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதில் திறமை பெற்ற நாயன்மார்கட்டு வைத்திய பரம்பரையில் தோன்றியவரும் பட்டதாரி வைத்தியரும், நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்திய சாலையில் சிரேஷ்ட வைத்தியராக பலகாலம் பணிபுரிந்தவரும், லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் முன்னைநாள் விரிவுரையாளருமான டாக்டர் திருமதி ப. ஸ்ரீஜெயதேவி அவர்கள் 455ஏ, கே.கே.எஸ். வீதியில் சிவன்கோவில் அருகில் இயங்கிவந்த தனது வைத்தியசாலை சேதமடைந்ததை அடுத்து அதைப் புனரமைப்பு செய்யும்வரை தனது வைத்தியசாலையை இல. 179, நாவலர் வீதியில் இடமாற்றம் செய்துள்ளார். (நாவலர் பாடசாலைக்கு அருகாமையில்)

டாக்டர் திருமதி ப. ஸ்ரீஜெயதேவி
D. A. M.

சி 4177)

வலி - வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சனைகள் பற்றி ஆராயக்கூட்டம்

காலம்: 14-12-1990ம் திகதி
வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணி

இடம்: யா/இராமநாதன் கல்லூரி,
மருதனாமடம், சுன்னாகம்.

இடம்பெயர்ந்த மக்கள் கிராமரீதியாக, கூட்டுறவுச் சங்க கிளைரீதியாக பிரதிநிதிப் படுத்தக்கூடிய வகையில் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சி. சிவமகராசா,
தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

தெல்லிப்பழை,
11-12-1990.

(எ-928)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991-03-07-ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல் / கணிதமும் புள்ளி விபரவியலும் / விலங்கியல் -

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1
சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11
உதவி விரிவுரையாளர்

சம்பள அளவுத்திட்டம்:

(1) சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1
ரூபா 9,600 - 8,250 - 11,600/- மாதமொன்றுக்கு.

(2) சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11
ரூபா 8,000 - 5,250 - 9,250/- மாதமொன்றுக்கு

(3) உதவி விரிவுரையாளர்
ரூபா 3,900/-
(நிலையானது) மாதமொன்றுக்கு

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களும் விவரங்களும் இப் பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் [தாபனங்கள்] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23X10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல்வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-12-10

(A- 926)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

வியாழப்பாணப் பல்கலைக்கழகம்,

வியசாயபீடம்,
கிளிநொச்சி

பதவி வெற்றிடம்

அமைய தொழிலாளி

மேற்படிபதவிக்கான நேர்முகப்பரீட்சை விவசாய பீடம், கிளிநொச்சி ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில் 1990-12-18-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். இப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கும்படிகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1) கல்வித் தகைமைச் சான்றிதழ்.
(2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(3) தேசிய அடையாள அட்டை.
(4) கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரம்.

கல்வித் தகைமை:
7-ம் வகுப்பில் சித்தி

வயது:
18வயதிற்குக் குறையாமலும் 40திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

சம்பளத் திட்டம்:
நாளொன்றிற்கு ரூபா 55/உம் படிகளும்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1990-12-11

(A 927)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

நிறை குறைந்த தராசுப் படிகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, அராலி, சங்கானைப் பகுதிகளில் உள்ள சந்தைகள் கடைகளில் பயன்படுத்தப் படும் அளவைப்படிகள் பெரும்பாலும் உடைந்தவையாகவும் நிறைகுறைந்தவையாகவும் இருப்பதாக பொருட்களைக் கொள்வனவு செய்வோர்கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள வியாபாரிகள் பயன்படுத்தும் தராசுகளிலும் சில தவறுகள் இருக்கின்றனவாம். இங்குள்ள வியாபாரிகள் நிறையைக்குறைத்தும் தமது பொருட்களை விற்பனை செய்து கொள்ளை இலாபம் பெறுகின்றனராம். (139)

வீதி சீர்கேடு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையிலுள்ள 'நளினன் வீதி' போக்கு வரவு செய்ய முடியாத அளவுக்குச் சேறும் சகதியுமாக இருக்கிறது.

இந்த வீதியால் குறிப்பாக யாழ் நகருக்குப் போக்கு வரவு செய்து வந்த மூளாய், வட்டுக்கோட்டை, சிவன்கோவிலடி, கலைநகர், சித்தன்கேணி, பிலவக்கை மக்கள் அராலிவீதி, சங்கரத்தை வீதி ஆகியவற்றைச் சுற்றிப் போக்குவரத்துச் செய்யவேண்டியுள்ளது. (139)

பணிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களில் சிலர் மதியபோசன விநியோகத்திற்காக கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட முற்பணத்தைதிருப்பிச்செலுத்தாதிருப்பதாகவும் இவற்றை இம்மாதம் 14 ம் திகதிக்குமுன்னர் திருப்பிச் செலுத்தாவிடில் அவர்களது சம்பளத்தில் அறவிடப்படுமெனவும் கணக்காளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்காளரின் அறிவித்தலை அடுத்து அதிபர்கள் சிலர்தாம் பெற்றுக்கொண்ட முற்பணத்தை திரும்பிச் செலுத்தி விட்டார்களா என சந்தேகிக்க வேண்டியுள்ளதாகவும் சரியாகத் தீர்மானிக்க முடியாதிருப்பதாகவும் அறியக் கிடக்கிறது.

நீண்ட நாட்களுக்குப் பின் இதுபற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதால் இடம்பெயர்ந்த அதிபர்கள் சிலர் தமது விபரங்களை காரியாலயங்களில் பார்க்க முடியாது கஷ்டப்படுகின்றனராம். இந்த முற்பணத்தைத் திருப்பிச் கொடுக்காத அதிபர்களுக்கு கடித மூலம் அறிவித்தால் ஏனைய அதிபர்களுக்கும் உதவியாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம் 16 DEC. 1990 1-00 P. M.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
19 DEC. 1990 1-00 P. M.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். கட்டணம் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்.

UNIKCO COMPUTER CENTRE



NO. 37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) (ஏ 923)

பர்மியர்களின் ஜனநாயக உரிமைகளை

நசுக்கும் இராணுவ அடக்குமுறை ஆட்சி!!

இவ்வாண்டின் ஆரம்பத்தில் பர்மாவில் நடைபெற்ற மக்கள் எழுச்சி போராட்டங்களில் பர்மாவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்த பர்மிய ஜனாதிபதி நீவின் உத்தரவிட்டார். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இராணுவ ஆட்சியர்ளர்களோ மக்களைத் திசைதிருப்பி ஜனநாயக உரிமைகளை மீண்டும் ஒடுக்கவே தேர்தல் என எண்ணிச் செயல்பட்டனர்.

திட்டமிட்டபடி நீதியான தேர்தலொன்று மே திங்கள் இருபத்தேழில் பர்மாவில் நடைபெற்றது. பதவியில் இருந்துகொண்டே பர்மிய ஜனாதிபதிநீவின்கட்சியமைத்து போட்டியிட்டார். தேர்தலில் எதிரணியில் போட்டியிட்ட ஜனநாயக தேசிய முன்னணி அமோக வெற்றியீட்டியது. ஜனநாயக தேசிய முன்னணித் தலைவர் ஓம்சாஷிசூக்கி ஒன்பது ஆண்டுகள் வீட்டுக்காவலில வைக்கப்பட்டிந்தும் பெரு வெற்றியை தமுவக்கொண்டார். இராணுவ ஆட்சி ஜனநாயக முறைப்படி வெற்றி பெற்ற கட்சிகளிடம்ஆட்சியை ஒப்படைக்குமென மக்கள் எண்ணினர்கள். அது கடந்த ஆறுமாதங்களாக நடைபெறவில்லை. மாறாக இராணுவ ஆட்சியினர் சட்டங்களை மாற்றி மக்களின் உரிமைகளை நசுக்கும் சட்டங்களை உருவாக்கியுள்ளனர். இராணுவத்துக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னர் போல மக்கள் வீதிகளில் போராட்டம் நடாத்தினல் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படுவர் என அரசு எச்சரித்துள்ளது.

அரசு ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு முன்னர் பர்மாவிற்கான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளது. இவ்அரசியல் அமைப்பை பர்மாவில் வாழும் 133 சிறுபான்மை மக்களும் அங்கீகரித்த பின்னரே ஆட்சி ஒப்படைக்கப்படுமென அரசு கூறிவருவதை பர்மிய மக்கள் ஏற்பதற்கு தயாரில்லை.

ஆட்சியாளர்களிடம் ஆயுதம் இருப்பதால், பர்மாவில் வாழும் நான்குகோடி மக்களும் வாய்பொத்தி மௌனிகளாக வாழ்ந்துவருகின்றனர். ஆயுதங்களை வைத்துக்கொண்டு மக்களை அடக்கமுனையும் அரசுடன் மோதி கட்சியை அழித்துக்கொள்வதைத் தவிர வேறு எதனையும் சாதிக்கமுடியாதென ஜனநாயக தேசிய முன்னணி கருதுகின்றது. கடும் சட்டங்களை அரசு இயற்றியுள்ளதால் வீதிகளு மக்களைக் கொண்டுவந்து ஜனநாயக ரீதியான போராட்டங்களை மீண்டும் நடாத்த எதிரணியினர் விரும்பவில்லை.

பர்மாவில் அதிக மக்கள் புத்தசமயத்தவர்கள், புத்த பிக்குகள் இராணுவ அதிகாரிகள் வழங்கும் தானங்களை ஏற்பதில்லையென முடிவுசெய்து செயல்பட்டு வருகின்றன. இதுவும் ஒருவகை ஜனநாயக மீட்பு போராட்டமாக கருதினலும் அதுவும்அங்கு வெற்றி பெறவில்லை.

அண்மையில்கூட பர்மிய விமானத்தை இளைஞர்கள் கடத்தியும் அரசை அடிபணிய வைக்கமுடியவில்லை. ஜப்பான் பர்மாவுக்கு பொருளாதார தடைவிதித்தாலும் அண்டை நாடான சீனவும் தாய்லாந்தும் பர்மாவுக்கு பெருமளவில் உதவிவருகின்றன. சீனு பெருமளவு இரத்தின கற்களையும், காட்டு மரங்களையும் வாரிக்கோடிக்கணக்கான பணத்தை வழங்குவதால் பர்மாவின் இராணுவ செலவுக்கு இது போதுமானதாகவுள்ளது.

பர்மிய மக்களோ தமது காட்டுவளம் சீனவினல் சுரண்டப்படுவதாக குமுறிக்கொண்டுள்ளனர். இந்நிலையில் எது வரினும் பர்மிய மக்கள் இராணுவ தடைகளையும் உடைத்து இரத்தம் சிந்தியாவது ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் நாள் வெகு தூரத்திலில்லை.

ஸச்சி

எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

மனித உயிர், உடல், உடைமைஉட்பட அனைத்துக்கும் பாதுகாப்பு அளிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கும் வரையிலேயே ஜனநாயக அரசின் ஆயுட்காலம் நீடித்து நிலைக்கும்.

இன்று இலங்கையின் ஆட்சிப்பீடத்தை ஆட்டிப்படைப்பது ஜனநாயக அரசா? அல்லது யமன்-நாயகனுக்கிய அரசா? என்று மக்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சியினரே அங்கலாய்த்து பாராளுமன்றத்தில் கறுப்புப்பட்டி அணிந்து தமது கண்டனக்குரலை எழுப்பியுள்ளனர்.

உயிர்களைக் கொல்லும் அசுரத்தொழிலுக்கு அரசனுக யமனையே ஆக்கி அகிலத்தையே ஆட்டிப்படைத்து வருபவன் இறைவன்.

அதே யமதர்மனின் தொழிலையே தேசிய தொழிலாக்கி, பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதற்கும், பல லட்சக்கணக்கானவர்கள் அகதிகளாவதற்கும் காரணகர்த்தாவாகி அதிலும் அமைதி அடையாத அரசு நாட்டை தொடர்ந்தும் யுத்தகளமாக வைத்திருக்கும் வைராக்கியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

நாடளாவிய அவசரகாலச்சட்டம் வடக்கு-கிழக்கில் அடிக்கடி ஊரடங்குச்சட்டம் என்ற போர்வையில் அரசு தனது ஆயுட்காலத்தை நீடித்துக் கொண்டே போகிறது.

''அரசுக்கு பூரண ஆயுள், ஆனல் மக்களுக்கேநித்தியகண்டம்'' என்ற நியதியில், மனித அடிப்படை உரிமைகள் அனைத்தும் மீறப்பட்டு இந்துசமுத்திரத்தின் நித்திலமான இலங்கை, கொலைக்களமாகிவிட்டதைக் கண்டு பிடிக்க அரசு தவறிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசின்மீது நம்பிக்கை இழந்தவிட்ட மக்கள் நாட்டைவிட்டு ஓடுவதும், ''எமக்குத்தர வேண்டியதைத் தந்து, எம்மைப் போகவிட்டால் போதும்'' என்று ஓய்வூதியம்பெற முண்டியடித்து நிற்பதும் தவிர்க்க முடியாததே!

இத்தகைய இக்கட்டான நிலையுடன் பணத்தின் பெறுமதிக்குறைவு, வாழ்க்கைச்செலவு உயர்வு, வெளிநாட்டுக் கடன் பழு, அத்தனைக்கும் முகம்கொடுக்க முடியாத அரசு தொடர்ந்து வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று உள்நாட்டு யுத்தத்துக்கு கோடிகோடியாக கொட்டிக் குவித்து தனது ஆணவத்தைக்காட்டி, தமிழ் மக்களுக்கு பதுங்குகுழியும் அனைத்து மக்களுக்கு படுகுழியும் வெட்டிக் கொண்டிருக்கிறது.

யுத்தத்தைதொடர்ந்து நடாத்திவருவதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கண்டனக் குரல் ஓங்கியுள்ளதைக் கவனத்திற்கொண்டு தமிழ் இனத்தின் நீண்ட கால அடிப்படைப் பிரச்சனைகள் அனைத்துக்கும் நிரந்தர தீர்வைக்கண்டு, இலங்கையர் அனைவருக்கும் பூரண ஆயுள்வழங்க அரசு காலதாமதமின்றி ஆவனசெய்ய முன்வர வேண்டும்.

— மயூரன்

யாழ். பல்கலைக்கழக

பௌதிக விஞ்ஞான 2ம்வருட பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தின் பௌதிக விஞ்ஞானத்தில் இரண்டாம் வருட பரீட்சை - 1989 முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விபரம் வருமாறு:

எஸ். வி. இளங்கோ. பி. ஐங்கரன், ஆர். ஜெகதாசன், எஸ். காண்டீபன், கே. கே. மகிழ்லேஸ்வரன், வி. முரளி, என். பரமேஸ்வரன். ஜே. இராஜேஸ்வரன், கே. சுபேந்திரன், எஸ். செல்வராஜன், கே. ஜெயசங்கர், சி. எவ், எவ். ஜெயந்திநாதன், எம். அருளானந்தம், எஸ். கோணசேன். கே. அகிலன், எஸ். அன்ரன். ரவிராஜ், ரி. அரவிந்தன், எம். அருணசலம். ஆர். எஸ். சந்திரன், எஸ். காண்டீபன், ரி. லோகநாதன் எஸ். மனோகரன், எஸ். ராஜசேகர், ரி. சத்தியசீலன், வி. சிவபாலன், ரி. தேவநாதன், கே. எம். வித்தியானந்த நேசன், ஜி. சபேசன், எஸ். சிவரவின், எஸ். கிருபாகரன். எம். மணிசேகரன், ரி. ஏ. ஜே. இன்பராஜ், எஸ். இலட்சுமணன், எம். ஆனந்தராஜா, ஏ, நித்தியானந்தன். எஸ். எஸ். பாஸ்கரன், கே. எஸ். ராஜகுமார். எல். பி. ஈ. உதயகுமாரன், எஸ். இராஜசூரியர், என். சபாநாயகம், ஆர். வரதராஜன், எம். ஜெயகணேஷ், எஸ். ஜெயகுமார், ஏ. கோடீஸ்வரன், எஸ், மங்களேஸ்வரன், ஈ. பி. நரேந்திரன், பி. ஜெயகுமார், கே. சிவசோதி செல்விகள்; எஸ். ஹேமவதி, வி. சூரியகுமாரி, எஸ். தங்கவடிவேலு, கே. தமிழ்ச்செல்வி, கே, இந்துமதி, எஸ் சியாமளா, எஸ். சுமத்திரா, எஸ். மணிமாலா, பி. இன்பரதி, பி. கிவாஜினி, ஈ. ஏ. கே. தவநாயகம், எஸ். ஜெயதலா, கே. ஜெயரூபி, பி. கோமதி, என். இமில்டா, பி. பகீரதி, ஆர். எம். இராஜேந்திரம். ஜே. சுதர்சனு, எஸ். சிவமதி, எஸ். சிந்தாதேவி, கே. கிருபா, ஜி. சியாமளா, பி. சுனீதா கலா. ஆர். தயாளினி, சி. தர்மினி.

மேற்படி பரீட்சையில் நூன சித்தியடைந்தவர்கள் விபரம் வருமாறு,

கே. தட்சணேஸ்வரமூர்த்தி, ரி. விவேகானந்தா, எம். எல். ராஜ்குமார், ஆர். செல்வராஜா, எம். பி. ஹியூபேட், கே. ஜெயசீலன், பி. ஜோனந்தன். ரி. கருணபாலன், வி. எஸ். போல்ராஜ், எஸ். தனஞ்செயன், செல்வி. எஸ். தார்மதி, பி. தவநாதன், சி, உதயமூர்த்தி, வி. தேவராஜா, ஏ. சத்தியமூர்த்தி.

மேற்படி பரீட்சையில் மீள் நூன சித்தியடைந்தவர்கள் விபரம் வருமாறு!

செல்வி. பி. எஸ். சுபத்திரா என். மகேந்திரன். எஸ். அன்ரனி யோகநாதன், எம். ஆர். ஜெயமோகன். செல்வி. என். வசந்தினி, வி, பரமேஸ்வரன், செல்வி. சே. புஸ்பராணி, ரி. ஞானகரன், ஜி. சிவலிங்கம், செல்வி. எம். தம்பிராஜா, இரசாயனவியல் 1989 எட்மன் ஜே. கூரே ஞாபகார்த்த புலமைப்பரிசில் செல்வி. வி. சுந்தரலிங்கத்திற்கு கிடைத்துள்ளது,

ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த பரிசு 1939 அன்ரன் ரவிராஜ், செல்வி சுந்தரலிங்கம் ஆகிய இருவருக்கும் கிடைத்துள்ளது. (153)

வேண்டுகிறோம்

தெய்வமே! அன்று
யாரோ சொன்னுர்
''கொடுக்கின்ற தெய்வம்
கூரையைப் பிய்த்தும்
கொடுக்கும்'' என்ற
பழமொழியை இன்று
தான்
அறிந்தாயா?
அறிந்தவுடன் அதை
மெய்யாக்கிட நீ
முனைந்துள்ளதாலே
வீட்டுக் கூரைகளைப்
பிய்த்துக் கொண்டு நீ
கொடுப்பவையெல்லாம்
குண்டுகளாகவே
வீட்டினுள் வீழ்வதால்
மக்களின் வாழ்வு
உருத்தெரியாமலேயே
சிதறிப் போகின்றது!
தெய்வமே ஆதலின்
கூரைகளைப் பிய்த்துக்
கொடுக்கும்கொடைகளை
மக்கள் உயிருடன்
வாழ்ந்திடும் வண்ணம்
உடனே நிறுத்துக

- ''முருகு''

சேமித்த சங்குகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-மன்னுர் மாவட்டங்களிலிருந்து சங்குகுளிகாரரிடம் கொள்வனவு செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான சங்குகள் சமீபகால ஷெல், பீரங்கி, விமானத்தாக்குதலால் சேதமடைந்துள்ளன.

வடமாகாண கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தால் சேகரிக்கப்பட்டு யாழ்.முதலாம் குறுக்குத்தெரு பனிக்கட்டி ஆலை பண்டகசாலையில் சேமித்து வைக்கப்பட்ட சங்குகளே சேதமடைந்துள்ளன.

இவை பங்களாதேஷ் உட்பட சில வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவிருந்தனவென பொறுப்பாளர் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

பலதும் பத்தும்

இலக்கண கொலையா?

குமாரசாமிப்புலவர் நாவலர் பாடசாலையில் கற்பிக்கும் காலத்தில் பாடசாலையில் பரீட்சைநடாத்தி தனிப்பட்ட அறிக்கை சமர்பிக்கவேண்டுமென்பது அதிபரின் உத்தரவு இலக்கணம் தெரியாத கல்வியதிகாரிகள் செயலை குமாரசாமிப் புலவர் கண்டிக்க தவறவில்லை. ஒருமுறை ''காவற்கார இராமன் என்னும் தொடர் என்ன எச்சம்''என பிழைபடகல்வியதிகாரி வினவியதால் பெரும் பிணக்கே ஏற்பட்டது.

பாடசாலையில் நடப்பது இலக்கணப்பரீட்சையா? அல்லது இலக்கணக் கொலையா? இலக்கணம் தெரியாதவர்கள் இலக்கணத்தை எல்வாறு பரீட்சிக்கமுடியுமென என அதிபரையே சாடியபெருமை குமாரசாமிப்புலவருக்குண்டு.

- ஞானி

கிழக்கு அகதிகளுக்கு

வலிவடக்கு பிரதேச சபையினர் ஒருநாள் சம்பளம் வழங்க முடிவு

(உடுவில்)

கிழக்கு மாகாண அகதிகளுக்குத் தமது ஒருநாள் சம்பளத்தினை வழங்குவதென வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறை, மயிலிட்டி, மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய பிரதேச சபைகளின் ஊழியர்கள் கலந்துகொண்ட விசேட கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

வலி-வடக்கு பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர் திரு. வி. இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வலி-வடக்கு பிரதேச சபைகளின் சகல ஊழியர்களும் தவறாது கடமைக்குச் சமுகம் தரவேண்டும் எனவும், இடம்பெயர்ந்து கஷ்டப்படும் மக்களுக்கென ஒதுக்கப்படும் ஏதாவதுசேவைகளில் தம்மை அவர்கள் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் எனவும் திரு. இராசையா கேட்டுக்கொண்டார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு ஒதுக்கீடுகள் சம்பந்தமாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (109)

கொழும்பில்

500 ரூபா கள்ளநோட்டு; இந்திய பிரஜைகள் கைது

(கொழும்பு)

தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டதாக கருதப்படும் ஐநூறு ரூபாய் கள்ள நோட்டுக்களை இரகசியப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இப்போலி நோட்டுக்களை வைத்திருந்ததாக ஐந்து இந்தியப் பிரஜைகள் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 328 நோட்டுக்களை கைப்பற்றியுள்ளனர்.

இதே மாதிரியான போலி நோட்டுக்களை ஈ.பி.ஆர்.எல்.எப் அச்சிட்டதாக இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் அரசு குற்றம் சாட்டியிருந்ததுடன் பத்திரிகைகளும் போலி நோட்டுக்களை படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தது.

இதே மாதிரியான போலி நோட்டு ஒன்றை கொழும்பு வங்கியில் வைப்பிலிட முயன்ற யாழ்ப்பாண வியாபாரியொருவர் பெலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

கழிவகற்றும் இயந்திரம் விரைவில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை கழிவகற்றும் இயந்திரங்கள் விரைவில் இயங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த கழிவகற்றும் இயந்திரங்கள் 1985ம் ஆண்டு தொடக்கம் யாழ்.கோட்டை சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கை காரணமாக இயங்க இயலாத சூழ்நிலையில் இருந்தது.

கழிவகற்றும் இயந்திரம் இயங்காத காரணத்தால் தற்போது கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு வெள்ளவாய்க்கால் ஊடாக கடலுக்குள் செலுத்தப்படுகிறது. முன்பு பம்பிமூலம் கழிவுகள் பண்ணைக் கடலில் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (153)

தலாய்லாமா சென்னை வருகிறார்

(சென்னை)

திபெத்திய பௌத்த ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா இன்று சென்னைக்கு வருகிறார்.

பாரதிய வித்தியாபவன் அழைப்பின் பேரில் சென்னை வரும் தலாய்லாமா காஞ்சிபுரத்தில் பரமாச்சாரி சுவாமிகளைச் சந்திக்கவுள்ளார்.

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் நேற்று கைது

(டாக்கா)

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் நேற்று காலை டாக்காவில் அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தங்கக் கடத்தல், ஊழல், நிர்வாகச் சீர்கேடு குறித்தே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தற்போது இவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் எர்ஷாத்துக்கு எதிராக விரைவில் நீதி விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அதி உயர் பட்ச தண்டனை வழங்கப்படும் என்றும் இடைக்கால அரசு தெரிவித்துள்ளது. (சி)

முகாம் மீது தாக்குதல்

(மட்டுநகர்)

மட்டுநகர் ஆரையம்பதி இராணுவமுகாம் காவல் அரண்மீதும், தாளங்குடா இராணுவமுகாமிலிருந்து ஆரையம்பதி இராணுவ முகாமுக்கு வாகனத்தில் வந்த இராணுவத்தினர் மீதும், நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் "அருள் 89" தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (வி)

காப்புறுதி நேற்று முதல் வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நேற்று முதல் ஆயுள்காப்புறுதி வேலைகள் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் வாடிக்கையாளர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டது.

ஏராளமான வாடிக்கையாளர்கள் பணம் கட்டக்காசோலையாகவும், பணமாகவும் கொண்டுவந்தனர் எனினும் குறிப்பிட்ட அளவு மட்டும் ஏற்கப்பட்டது.

இலக்கத்துண்டு (டோக்கன் காட்) முறை முப்பது பேருக்கு மட்டும் தினமும் காலை 9 மணிக்கு வழங்கப்படும். காலை 9-30 மணியிலிருந்து 10-30 மணிவரை காப்புறுதிக்குரிய கட்டுப்பணங்களைச் செலுத்தலாமெனத் தெரியவருகிறது. (153)

இராணுவம்-ரெலோ மீது புலிகள் தாக்குதல்

(மட்டுநகர்)

துறைநீலாவணையில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு வாகனம் ஒன்றில், சிறிலங்கா இராணுவமும், ரெலோவும் ரோந்து சுற்றிவந்தபோது, இவர்களை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதாகவும், ஆனால் சேதவிபரம் இதுவரை தெரியவரவில்லை எனவும் கூறப்படுகின்றது. (வி)

பெண்கள் மீது பாலியல் வன்முறை

(மட்டுநகர்)

மட்டுநகர் மம்மியடிமுனை இராணுவத்தினர் இருதமிழ் பெண்களை விசாரணைக்கெனக் கூட்டிச்சென்று அவர்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தியதாகத் தெரியவந்துள்ளது. (வி)

தி. மு. க. அரசு மீது நெடுமாறன் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக அரசின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும், தி. மு. க. அரசின் போக்குக் குறித்தும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. நெடுமாறன் கார்சார்மாகக் குற்றம் சாட்டினார்.

மதுரையில் நேற்று செய்தி நிருபர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்ட குற்றச்சாட்டினை அவர் சுமத்தினார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. நிர்வாகம் சீராகச் செயல்பட முடியாதவாறு காவல்துறை முடங்கிக் கிடக்கிறது. தி. மு. க.வின் தலையீடு, நிர்வாகச் செயற்பாடுகளில் அத்து மீறிக் காணப்படுவதே இதற்கெல்லாம் காரணம் எனச் சுட்டிக்காட்டினார். (க)

இலங்கை அரசின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் புலிகளின் கை ஓங்கி வருவதை கடந்த 48 மணி நேரத்தாக்குதல் கோடிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது.

தற்போதைய நிலையில் யுத்தம் உடனடியாக முடிவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக்குறைவாகவே இருப்பதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது. [சி]

சிறையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 6,500 ஜே. வி. பி. தீவிரவாதிகள் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு பல சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பதன் மூலம் தமது உறுப்பினர்களின் பலத்தை பெருமளவு அதிகரிக்கச்செய்ய ஜே. வி. பி. யினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் புலனாய்வுத் துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

அருள்-89 தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமம் பகுதியில், இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட 'அருள்-89' தாக்குதலில் பல படையினர் படுகாயம் அடைந்தனர்.

இப்பகுதியில் முட்கம்பி அடிக்கும் வேலையில் ஈடுபட்ட படையினரே இவ்வாறு படுகாயம் அடைந்தனர். (வி)

இந்து-முஸ்லிம் கலவரம் 200 பேர் பலி

(புதுடில்லி)

வடஇந்தியாவில் கடந்த ஐந்துதினங்களாகதொடர்ந்து இடம்பெற்றுவரும் இந்து-முஸ்லிம் கலவரங்களில், 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

100 பேர் மட்டும் ஹைதராபாத் நகரிலும், 50 பேர் அலிகாரிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேசத்து அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் நடந்த வன்செயல்களில் இருவர் பலியானார்கள்.

தோப்பூரில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே நிகழ்ந்த வாக்குவாதத்தில், மூன்று குழந்தைகள் தூக்கி வெளியே வீசப்பட்டனர். இவர்களில் ஒரு குழந்தை பலியானது. மற்றும் இருகுழந்தைகள் படுகாயமடைந்தன. (அ)

சனி மாற்றம் விசேட பலன்கள்

நாளை (14-12-90) ஈழநாட்டில் வெளிவருகிறது

மேமாதம் 5ந் திகதி வக்கிரகதியில சஞ்சரித்த சனிபகவான் படிப்படியாக தனு ராசியை அடைந்து, டிசம்பர் 14ந் திகதி மீண்டும் மகரராசியை அடைகின்றார். ஏழுமாதங்களாக தமிழ் மக்கள் அடைந்த இன்னல்களுக்கு விமோசனம் கிட்டும்.

இது ஜோஸ்யர் கணிப்பு—

சிறிய வஸ்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றையோரிடம் அதை காண்பித்தபோது அது தவறிக் கீழே விழுந்து வெடித்துச் சிதறியது.

இச்சம்பவத்தில் ஏ. ஜலந்திரன் என்ற 12 வயதுச் சிறுவனும், சிவப்பிரகாசம் சிவகுமார் (வயது 33) என்பவரும் பலியானார்கள்.

பலியான சிவகுமாரின் தம்பி சி. சுந்தரகுமார் (வயது 20) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காவலூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் கடும்தாக்குதலில் இரு இராணுவம் கொல்லப்பட ஏனையோர் படுகாயமடைந்தவர்களுடன் உடனடியாக முகாம் திரும்பியது. ஆயுதங்கள் பல புலிகளால் மீட்கப்பட்டுள்ளது.

இருவர் பலியானது குறித்து அரசும் ஊர்ஜிதம் செய்துள்ளது. (வி)

கடல்பிராந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து தெரியவருகிறது.

சீனப்பிரதமர் திரு. லீபெங்கின் விஜயம் இதனை நிறைவேற்றலாமெனவும் கூறப்படுகிறது.

1962ல் அப்போதைய இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவினால் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயுடன் ஆலோசிக்கப்பட்ட இத்திட்டம், பின்னர் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவினால் 1982 காலப்பகுதியில் நிராகரிக்கப்பட்டதாம்.

எனினும் தற்போது ஜனாதிபதி பிரேமதாசா இதனை மீளப் புதுப்பிக்கும் வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும் ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (சி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' பிறிண்டேர்ஸ் லிமிட்டெட் யாழ்ப்பாணம் சிவன் வீதியில் மேற்கு விதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

கிராமிய பண்பை இழக்காதவர் இரசிகமணி

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் கிராமிய பண்பை போற்றிய இருவரில் இரசிகமணி கனக. செந்திநாதன் ஒருவர். மற்றவர் பேராசிரியர் கலையருவி க. கணபதிப் பிள்ளையாவர்.

இவர்கள் இருவரும் கிராமத்தைநேசித்ததோடு கிராமப் பண்போடு ஊடுசெழித்தவர்களாவர்''

இரசிகமணி கனக. செந்திநாதனின் 19வது நினைவுதினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற பொழுது வித்துவான் சொக்கன் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆதரவில் சபை தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது. திரு. சொக்கன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது; ஈழத் தமிழ் இலக்கிய விமர்சனப் பணியில் ஒரு பெருஞ்சிகரமாக விளங்கியவர் இரசிகமணி கனக. செந்திநாதன், எந்த மாறுபட்ட சூழ்நிலையிலும் கிராமிய பண்பை இழக்காதவர். கிராமங்கள் வளர்ச்சியடைந்து நகரம் பண்புகள் அடையும் போது கிராமதிற்குரிய நல்ல பண்புகள் இழக்கப்படுகின்ற என்ற கவலை இரசிகமணியிடம் இருந்தது என்றார்.

உவர்மலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளாக்கப்படுகின்றனர்.

பல சித்திரவதைகளின்பின் ஞாயிற்றுக்கிழமைகளில் சங்கிலியில் பிணைக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் குளிப்பதற்காக அனைவரும் படகுகளில் கொண்டுசெல்லப்படுவார்கள்.

அங்கு, அனைவரும் படகுகளில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுக் கடலில் வீசப்படுவர். இவ்வாறு 24 பேரை படகில் ஏற்றி, கடலில் வைத்துச் சுடும்போது 4 பேர் தப்ப முயற்சித்தனர். இவர்களில் சாம்பல்தீவு சல்லி என்னும் இடத்தைச் சேர்ந்த இவர் காயங்களுடன் தப்பினார்.

சாம்பல்தீவில் கரைசேர்ந்த இவர் காட்டுவழியாக முல்லைத்தீவு வந்தடைந்தார். மிகுதிமூவரும் தப்பித்தார்களா அல்லது கொல்லப்பட்டார்களா எனத் தெரியவில்லை.

உவர்மலை இராணுவ முகாமில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் இருட்டறையில் தம்மீது மேற்கொள்ளப்படும் மிக மோசமான சித்திரவதை குறித்தும் தமக்கு வழங்கப்படும் சிறிதளவு உணவு குறித்தும் அவர் தெரிவித்தார். (வி)

மன்னார் கடலில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழிலாளர் கைது செய்யப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (சி)